இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 18-06-2024

# “அரசியலில் அபூர்வம்! அரசியலில் அற்புதம்!”

இந்தியாவே திரும்பிப் பார்க்கும் வெற்றியை ‘இந்தியா’ கூட்டணி தமிழ்நாட்டில் பெற்றது. புதுச்சேரி உள்ளிட்ட நாற்பது தொகுதிகளிலும் முழுமையான வெற்றியைக் கைப்பற்றியதன் மூலமாக ‘இந்தியா’ கூட்டணியின் கோட்டையாக தமிழ்நாடு பிரகடனப்படுத்தப்பட்டது. மற்ற மாநிலங்களில் கூட ஒரு தொகுதி, இரண்டு தொகுதியை பா.ஜ.க. கைப்பற்றியது. ஆனால் தமிழ்நாட்டில் பா.ஜ.க.வின் பம்மாத்து பலிக்கவில்லை. பின்னங்கால் பிடறியில் அடிபட விரட்டப்பட்டது பா.ஜ.க.

**“நாங்கள் தமிழ்நாட்டில் ஒரு இடத்தில் கூட வெற்றி பெற முடியவில்லை” என்று பா.ஜ.க. கூட்டணிக் கட்சி எம்.பி.க்கள் கூட்டத்தில் கண்ணீரோடு தழுதழுக்கச் சொன்னார் நரேந்திரமோடி. ஏன் வெற்றி பெற முடியவில்லை என்ற காரணத்தைச் சொல்லவில்லை. அதை அவரும் உணர்ந்ததாகவும் தெரியவில்லை. உணர்ந்தாலும் சொல்லவும் மாட்டார். சொல்லவும் முடியாது.**

பா.ஜ.க.வை அரசியல் ரீதியாக மட்டுமல்ல, தேர்தல் அரசியலுக்காக மட்டுமல்ல, கொள்கை ரீதியாக விமர்சித்து அதன் முகத்திரையைக் கிழித்து வரும் கூட்டணியாக திராவிட முன்னேற்றக் கழகம் தலைமையிலான இந்தியாக் கூட்டணி செயல்பட்டு வருகிறது. அதுவும் இந்தத் தேர்தலுக்கு முன்னதாக உருவான கூட்டணி அல்ல இது. ஐந்தாண்டு காலமாக பாசிச பா.ஜ.க.வுக்கு எதிராக ஜனநாயகப் போர் நடத்தி வரும் கூட்டணி இது. பாசிச பா.ஜ.க.வை வளர்ப்பது, இந்தியாவுக்கே ஆபத்தானது என்பதை அடித்தளம் வரை பரப்புரை செய்து வைத்திருந்ததால் தான் இந்த வெற்றியை தமிழ்நாட்டில் பெற முடிந்தது.

**“பா.ஜ.க.வுக்கு வாக்களிப்பது அவமானம் என்ற எண்ணத்தை உருவாக்க வேண்டும்” என்று தி.மு.க. தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் பரப்புரை செய்தார்கள். இதனைத் தமிழ்நாட்டு மக்கள் உளப்பூர்வமாக ஏற்றுக் கொண்டதன் அடையாளம் தான் நாற்பதுக்கு நாற்பது எனப் பெற்ற வெற்றியாகும். இந்த வெற்றிகரமான முடிவுக்கான வெற்றி விழா தான் நேற்றைய தினம் கோவையில் நடந்த வெற்றிகரமான விழா ஆகும்.**

தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா – நாற்பதுக்கு நாற்பது வெற்றியைத் தந்த தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் விழா – இந்த வெற்றிக்கு இந்தியாக் கூட்டணித் தலைவர்களை அழைத்துச் சென்ற மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களுக்குப் பாராட்டு விழா ஆகியவை ஒருங்கிணைக்கப்பட்டு முப்பெரும் விழாவாக கோவையில் கொண்டாடப்பட்டது. இந்த மேடையிலும் ‘இந்தியா’ கூட்டணியின் ஒற்றுமையே புலப்பட்டது.

**‘செய்கூலி, சேதாரம் இல்லாமல் முழுமையாகக் கிடைத்த வெற்றி’ என்று இதனை உருவகப்படுத்தினார் திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள். கூட்டணிக் கட்சித் தலைவர்கள் அனைவரும், ‘இந்த வெற்றியை சாதித்துக் காட்டியது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தான்’ என்று புகழ் மாலை சூட்டினார்கள். ‘உங்களால் மட்டும் எப்படி முழுமையான வெற்றி சாத்தியமானது என்று அகில இந்தியத் தலைவர்கள் அனைவரும் ஆச்சர்யமாகப் பார்க்கிறார்கள்’ என்றார் காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை. ‘தி.மு.க.வுக்கு செல்வாக்கான தொகுதியைக் கூட கூட்டணிக் கட்சிக்கு ஒதுக்கி, எங்களுக்கு பலவீனம் என்று தெரிந்த தொகுதியை தாங்கள் எடுத்துக் கொண்டு மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் செயல்பட்ட பாங்கு தான் இந்த வெற்றிக்குக் காரணம்’ என்றார் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் செயலாளர் பாலகிருஷ்ணன். ‘இங்கே தமிழ்நாட்டில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினைப் போலவே மற்ற மாநிலங்களிலும் தலைவர்கள் செயல்பட்டு இருந்தால் இந்தியா கூட்டணி ஆட்சியையே பிடித்திருக்கும்’ என்றார் இந்தியக் கம்யூனிஸ்ட் செயலாளர் முத்தரசன்.**

விடுதலைச் சிறுத்தைகள் தலைவர் தொல்திருமாவளவனின் உரை உணர்ச்சியின் துடிப்பாக மட்டுமல்ல, உண்மையின் வெடிப்பாக அமைந்திருந்தது. **“சிதம்பரம் தொகுதியில் நான் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், எஸ்.எஸ்.சிவசங்கர் ஆகிய இரண்டு அமைச்சர்களைப் போட்டார் முதலமைச்சர் அவர்கள். ஒரு மணி நேரத்துக்கு ஒரு தடவை எம்.ஆர்.கே.விடம் பேசிக் கொண்டே இருந்தார் முதலமைச்சர். தங்கள் கட்சி வெற்றி பெற்றால் போதும் என்று நினைக்காமல் அனைவரும் வெற்றி பெற வேண்டும் என்று நினைத்தார். தி.மு.க. வலிமை பெற்ற தொகுதிகளை கூட்டணிக் கட்சிகளுக்கு வழங்கி, ரிஸ்க்கான தொகுதிகளில் நாங்கள் போட்டியிடுகிறோம் என கூட்டணிக் கட்சிகளையும் தனது கட்சியாக எண்ணி வெற்றி பெற வைத்த பெருமை அண்ணன் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு உண்டு. இதுதான் அரசியலில் அபூர்வம்! அரசியலில் அற்புதம்”** என்றார் தொல்.திருமா.

இவை அனைத்துக்கும் பிறகு இறுதியாக உரையாற்ற வந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த வெற்றியை தி.மு.க. உடன்பிறப்புகளுக்கும், இந்தியா கூட்டணி தொண்டர்களுக்கும், அனைத்துத் தலைவர்களுக்கும் உரித்தாக்கி உயர்ந்துநின்றார். **“இரத்தத்தை வியர்வையாகச் சிந்தி - காலத்தை தனது கடமைகளுக்காக மட்டுமே ஒப்படைத்து - 40 மட்டும் தான் நமது இலக்கு - என்ற அடிப்படையில் உழைத்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொண்டன் - தோழன் உடன்பிறப்பு அத்தனை பேரும் இருக்கும் திசையை நோக்கி நான் வணங்குகிறேன்”** என்று தனக்கு போட்ட புகழ்மாலைகள் அனைத்தையும் தொண்டனுக்கு அணிவித்தார் தலைவர்.

**“இவை தனிப்பட்ட ஸ்டாலினுக்கு கிடைத்த பாராட்டு அல்ல, மேடையில் இருக்கும் அனைத்துத் தலைவர்களுக்கும் உரிய பாராட்டு”** என்று சொல்லி நிறைகுடமாக நின்றார் தலைவர்.

**ஆம்! இன்றைய அரசியலில், திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் அபூர்வமான தலைவரே ஆவார். அவர் நிகழ்த்திய அற்புதமே இந்த வெற்றி!**

## டி.ஆர்.பாலு எம்.பி. வாக்காளர்களுக்கு நன்றி!

சென்னை, ஜூன் 18 –

தாம்பரம் மாநகரம், பம்மல் தெற்கு பகுதிக்குட்பட்ட பகுதிகளில் அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., இ.கருணாநிதி எம்.எல்.ஏ., எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., பகுதிச் செயலாளர் – மண்டலக் குழுத் தலைவர் வே.கருணாநிதி ஆகியோர் முன்னிலையில் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தார்.

இதில் மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், பம்மல் வடக்கு பகுதிச் செயலாளர் திருநீர்மலை த.ஜெயகுமார், பம்மல் தெற்கு பகுதி நிர்வாகிகள் ப.காளேஸ்வரன், ஆர்.உமாசங்கர், என்.பன்னீர்செல்வம், துரை.இளங்கோவன், பா.கவிதா, பா.டில்லி, பி.ஜே.வேந்தன், இரா.கந்தவேலு, என்.கே.ரவிச்சந்திரன், ரா.கோகுல், சு.மனோகர் ஆகியோர் பங்கேற்கின்றனர். கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. அவர்களுக்கு பம்மல் தெற்கு பகுதி தி.மு.க. சார்பில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.



விக்கிரவாண்டி தொகுதி காணை தெற்கு, வடக்கு மற்றும் மத்திய ஒன்றியங்களில் நடைபெறும் விக்கிரவாண்டி தொகுதி வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவா அறிமுகம் மற்றும் செயல்வீரர்கள் கூட்டத்திற்கான இடங்களை உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். மாவட்டச் செயலாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி, மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், ஒன்றியச் செயலாளர்கள் கல்பட்டு வி.இராஜா, ஆர்.முருகன், ஆர்.பி.முருகன், அ.சா.ஏ பிரபு, மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் சிவக்குமார், ஒன்றிய பழனி, செல்வம், செல்வராஜ், சிவராமன், மதன், கருணாகரன், கணேசன், ஏழுமலை, தகவல் தொழில்நுட்ப அணி ப.அன்பரசு, கதிரவன், ராகுல் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

### தேசிய ஜனநாயகக் கூட்டணிக் கட்சிகள் கூடி ஆலோசனை நடத்திய பிறகே

# மக்களவைத் தலைவரை முடிவு செய்ய வேண்டும்!

## பா.ஜ.க.வுக்கு தெலுங்கு தேசம் கட்சி வலியுறுத்தல்!

அமராவதி, ஜூன் 18-

நடந்து முடிந்துள்ள மக்களவை தேர்தலில் ஆட்சி அமைக்க தேவையான பெரும்பான்மை இடங்களான 272 இடங்களை பா.ஜ.க. பெறவில்லை. 240 இடங்களை மட்டுமே அக்கட்சி பெற்றுள்ளது. இதனால் தெலுங்குதேசம் கட்சியின் 16 எம்.பி.க்கள் மற்றும் ஐக்கிய ஜனதா தளம் கட்சியின் 12 எம்.பி.க்கள் மற்றும் சில கட்சி எம்.பிக்களின் ஆதரவுடன் பிரதமராக மோடி பதவி ஏற்றுள்ளார்.

இந்நிலையில், வரும் 24ஆம் தேதி புதிய மக்களவை கூடுகிறது. முதல் இரண்டு நாட்கள் எம்.பி.க்கள் பதவி ஏற்பு நடைபெறும். 26 ஆம் தேதி சபாநாயகர் தேர்வு நடைபெற உள்ளது.

சபாநாயகர் பதவி பா.ஜ.க.விடம் சென்றால் மக்களவையில் குதிரை பேரம் மூலம் எம்.பி.க்கள் விலை பேசப்பட்டு பா.ஜ.க.வுக்கு இழுக்கப்படுவார்கள் எனவும், மக்களவை முன்பு போல் ஒருதலை பட்சமாக செயல்படும் என்று காங்கிரஸ் மூத்த தலைவர் அசோக் கெலாட் உள்ளிட்டோர் கருத்து தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையே, தங்கள் கட்சியைச் சேர்ந்த ஒருவர் சபாநாயகராக தேர்வு செய்யப்பட வேண்டும் என தெலுங்கு தேசம் கட்சி வலியுறுத்தி வருகிறது. என்.டி.ஏ. கூட்டணி கட்சிகள் ஒன்று சேர்ந்து சபாநாயகர் யார் என்பதை முடிவு செய்ய வேண்டும் என்று தெலுங்கு தேசம் கட்சியின் செய்தி தொடர்பாளர் பட்டாபிராம் கொம்ம ரெட்டி கூறியுள்ளார்.

ஐக்கிய ஜனதா தளத்தைப் பொறுத்த அளவில் பா.ஜ.க. முன்னிலைப்படுத்தும் வேட்பாளருக்கு ஆதரவளிப்பதாக கூறியுள்ளது.

தெலுங்கு தேசம் கட்சி வேட்பாளரை நிறுத்தாவிட்டால் முக்கிய எதிர்க்கட்சியான காங்கிரஸ் கட்சி வேட்பாளரை நிறுத்த வேண்டும் என்கிற கோரிக்கைகளும் தற்போது எழுந்துள்ளன.

### அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வரவேற்புரை! அண்ணா அறிவாலயத்தில்

# அமைச்சர் கயல்விழி செல்வராஜ் இல்ல மணவிழா: கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமை!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் – இல.பத்மநாபன் முன்னிலை! அமைச்சர் பெருமக்கள் வாழ்த்து!

சென்னை, ஜூன் 18 -

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நல்வாழ்த்துக்களுடன், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணைச் செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் திருப்பூர் தெற்கு மாவட்ட வழக்கறிஞர் அணித் தலைவர் கே.செல்வராஜ் ஆகியோரின் புதல்வர் எஸ்.கே. திலிபனுக்கும், இராமநாதபுரம் மாவட்டம், ஏ.எம். ராமகிருஷ்ணன் கே.கே.கீதா (எ) ரோஜா ஆகியோரின் புதல்வி ஆர்.ஜி.ஜனனி ஆகியோரின் மண விழா நாளை (19.6.2024 - புதன்கிழமை) காலை 9.30 மணிக்கு, தேனாம்பேட்டையில் உள்ள அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில் நடைபெறுகிறது.

கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வரவேற்புரை ஆற்றுகிறார்.

மண விழாவினை கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்துகிறார்.

மண விழாவில் கழக இளைஞர் அணிச் செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் இல.பத்மநாபன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மண விழாவில் அமைச்சர் பெருமக்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்டக் கழகச் செயலாளர்கள் பொறுப்பாளர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற இந்நாள் - முன்னாள் உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் மற்றும் ஆன்றோர், சான்றோர், உற்றார், உறவினர்கள் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

மண விழாவில் கழக மகளிர் அணி துணைச் செயலாளர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் நன்றி கூறுகிறார்.

# ‘நீட்’ கேள்வித்தாள் முறைகேடு! மேலும் 9 மாணவர்களுக்கு சம்மன் - பீகார் மாநில போலீஸ் நடவடிக்கை!

பாட்னா, ஜூன் 18 -

பீகார் மாநில நீட் தேர்வு முறைகேடுகளில் தொடர்புடைய மேலும் 9 மாணவர்களுக்கு விசாரணைக்கு ஆஜராகுமாறு அம்மாநில போலீசார் சம்மன் அனுப்பி உள்ளனர்.

மே 5ஆம் தேதி நடைபெற்ற நீட் தேர்வின் போது கேள்வித்தாள் கசிந்ததாக பீகார் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த வழக்கில் இதுவரை 4 மாணவர்கள் உட்பட 13 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதனிடையே நீட் கேள்வித்தாள் கசிந்ததற்கான கூடுதல் ஆதாரங்கள் கிடைத்திருப்பதை தொடர்ந்து 9 மாணவர்களை விசாரணைக்கு ஆஜராகுமாறு பீகார் பொருளாதார குற்றப்பிரிவு போலீசார் சம்மன் அனுப்பி உள்ளனர். தேசிய தேர்வு முகமையிடமிருந்து கூடுதல் ஆவணங்களை பெற்று அதன் மூலம் இந்த 9 மாணவர்களுக்கு சம்மன் அனுப்பப்பட்டுள்ளது. உத்திர பிரதேசம், மகாராஷ்டிரா மற்றும் பீகாரைச் சேர்ந்த 9 மாணவர்களுக்கு நீட் கேள்வித்தாள் மற்றும் வினாத்தாள் வழங்கப்பட்டதாகவும், கேள்வித்தாள் கசிவு விவகாரத்தில் இந்த 9 மாணவர்களுக்கு தொடர்பு உள்ளதாகவும் போலீசார் சந்தேகிக்கின்றனர். நீட் கேள்வித்தாள் கசிந்ததை உறுதி செய்யும் ஆதாரங்கள் கிடைத்துள்ளதாக பீகார் கூடுதல் டி.ஜி.பி. தெரிவித்திருந்த நிலையில் இந்த புதிய சம்மன் அனுப்பப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையே, நீட் தேர்வுக்கு எதிராக ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் வீடு முன் கடந்த 13 ஆம் தேதி போராட்டம் நடத்திய மாணவர்கள் மீது டெல்லி போலீசார் வழக்கு பதிவு செய்துள்ளனர். அனுமதி இல்லாமல் முக்கிய பிரமுகர்கள் உள்ள பகுதியில் 144 தடை உத்தரவை மீறி போராட்டம் நடத்தியதாகக் கூறி மாணவர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கு கல்வியாளர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.




முதலமைச்சரும், கழகத் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பிற்கிணங், விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சரும், கழக இளைஞர் அணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் ஆணையின்படி ஈரோடு தெற்கு மாவட்டச் செயலாளரும், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சருமான சு.முத்துசாமி தலைமையில் ஈரோடு மாநகரச் செயலாளர் மு.சுப்பிரமணியம் முன்னிலையில் ஈரோடு தெற்கு மாவட்டக் கழக இளைஞர்அணி சார்பில் மாவட்ட அமைப்பாளர் ஜெ.திருவாசகம் ஏற்பாட்டில் இல்லம் தோறும் இளைஞர் அணி உறுப்பினர் சேர்க்கை சூரியம்பாளையம் பகுதியில் காந்தி நகரில் துவக்கி வைக்கப்பட்டது. நிகழ்வில் மாவட்ட துணைச் செயலாளர் ஆ.செந்தில்குமார், சூரியம்பாளையம் பகுதிச் செயலாளர் எஸ்.குமார வடிவேலு, வட்டச் செயலாளர் எம்.விஸ்வநாதன், மாவட்டத் துணை அமைப்பாளர்கள் எஸ்.எம்.பாலசுப்பிரமணியம், கி.ரகுராம், சதீஷ்குமார், ராகவேந்திரன், எஸ்.எஸ்.விஜயராஜன், இரா.நித்தின், மாநகர அமைப்பாளர் கே.டி.சேந்தன்புகழன், துணை அமைப்பாளர்கள் பா.ஜாகிர் உசேன், செ.ரமேஷ், அ.பார்த்திபன், பெ.சீனிவாசன், எஸ்.சசிகுமார் வி.நவீன்குமார், அ.அன்பரசன், இளைஞர் அணி ஸ்ரீதர், மோகன், மகரந்தன், தவசி, மதன், மணி, சிவா உள்ளிட்ட மாவட்ட, மாநகர, பகுதி இளைஞர் அணியினர், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.